**DEPOSITION OF WITNESS**

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No. 279/2026
Prosecution witnesses. PW2, LW3

| | |
|---|---|
| பெயர். திருமதி.மங்களபிரியா | ஜாதி. |
| கணவர் பெயர்.திரு.குசலவன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 27th day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு நான் 2025 ம் வருடம் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 16.05.2025 ம் தேதியில் நான், தலைமை காவலர் ராஜன் 335 மற்றும் தலைமை காவலர் ராஜேஷ் 1352 ஆகியோர் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு வேட்டையாக செய்யூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலில் வடக்கு செய்யூர் கிராமத்தை சேர்ந்த சாமிகண்ணு, த/பெ.வேதாச்சலம் என்பவர் அவரது வீட்டின் அருகே பனங்கள் விற்பதாக தெரியவந்து நாங்கள் 16.30 மணியளவில் அங்கு சென்றபோது நாங்கள் வருவதை சற்று தூரத்திலேயே பார்த்துவிட்ட அவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். அவர் இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 மண்பாணையில் சுமார் 20 லிட்டர் பனங்கள் இருந்தது. அவர் பனங்கள் இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தது தெரிந்தது. அங்கிருந்து பனங்கள்ளை உடன் வந்த என் முன்னிலையில்

16.45 மணிக்கு மகஜரில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி **17.00** மணிக்கு அழித்தல் மகசர் தயார் செய்து என் முன்னிலையில் பாதுகாப்பான முறையில் பனங்கள்ளை கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். **(அந்த அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. காவல் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.223/2025, U/s.4(1)(C) TNP Act r/w 4(1)(d) TNP Act ல் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி எதிரியை 35(1) BNSS படி பாண்டு எழுதி வாங்கப்பட்டு தக்க பிணையில் விடுவிக்கப்பட்டார். பின் இறுதியாக விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 19.05.2025 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

காவல் நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு கி.மீ தூரம் இருக்கும் என்றால் 25 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு யார் யார் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் அரசு வாகனத்தில் சென்றோம். காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டு சென்றோம் என்றால் காலை 9.00 மணிக்கு சென்றோம். எந்த எந்த கிராமத்திற்கு ஆய்விற்கு சென்றோம் என்றால் செய்யூர், சூணாம்பேடு சென்றோம். இரண்டு கிராமம் மட்டும் தான் சென்றோம் என்றால் செய்யூர், வடக்கு செய்யூர், இரும்பேடு, அகரம், சூணாம்பேடு. சம்பவ இடம் வடக்கு செய்யூர் என்றாலும் அங்கு நெருக்கமாக வீடுகள் இருக்கும் என்றாலும் பொதுஜன மக்கள்

அதிகமாக உள்ள கிராமம் என்றால் சரிதான்.

எதிரியின் வீட்டில் எந்த மூளையில், எந்த திசையில் கள்ளை கைப்பற்றினோம் என்றால் வடக்கு செய்யூரில் எதிரியின் வீட்டின் அருகே கிழக்கு திசையில் கைப்பற்றினோம். மேற்படி விவரம் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த ஊரில் எதிரியின் வீடு எந்த திசையில் உள்ளது என்றால் சரியாக ஞாபகம்இல்லை. சம்பவ இடத்தில் பொதுஜன சாட்சிகளை விசாரித்தேனா என்றால் யாரும் சாட்சி சொல்ல முன்வரவில்லை.

யாருக்காவது சம்மன் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வரைபம் எதாவது தயார் செய்தேனா என்றால் இல்லை. கைப்பற்றிய பனங்களை ஆய்விற்கு உட்படுத்தினேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் அழித்தல், கைப்பற்றுதல் மகசரில்ஒரே நபரை சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டு தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையாக சம்பவ இடம் சென்றிருந்தால் பொதுஜன சாட்சிகளையும், வரைபடமும் வரைந்திருந்பேன் என்றாலும் எதிரியிடமிருந்து கள்ளை கைப்பற்றி ஆய்விற்கு உட்படுத்தியிருப்பேன் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.